1973 பிப்ரவரி 28]

(Thiru R. Ponnappa Nadar followed by his party Members and Dr. H. V. Hande followed by his party Members walked out of the House. The Communist Party Members and Cong. (R) Members also followed.)

4. அறிவிப்புகள்--தொடர்ச்சி.

(இ) ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் குறித்து.

MR. DEPUTY SPEAKER: In view of the elaborate discussion on the subject, I do not give my consent to raise the matter under rule 42 of the Assembly Rules on the same subject given notice of by hon. Members Thiru Manali Kandasamy, Thiru K. Suppu, Thiru S. Alagirisami, Thiru N. Marudachalam and Thiru K. M. Subramanian.

6. 1973–74 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முதலில் எதிர்க் கட்சிதான் பேச வேண்டும். திரு. வகாப் அவர்கள்.

* **திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு சட்டமன்றத் துணை தலைவரவர்களே, இங்கே இப்பொழுது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்களால் கொடுக்கப்பட்டிருக்கின்ற 1973-74-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மேல் என்னுடைய கருத்துக் களைச் சொல்வதற்கு ஆசைப்படுகிறேன். இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றி பேசும் நேரத்தில், சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையைப்பற்றிச் சொல்லும்பொழுது சொன்னேன், அது முள் இல்லாத ரோஜா என்று. ஆனால் இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கையைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால் உரித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்ற இனிமையான பலாச்சுளை என்று கூற வேண்டும். ஏன் அப்படிக் கூற வேண்டுமென்றால், பலாச் சுளையின் இனிமையைப்பற்றி சாப்பிட்டவர்களுக்குத்தான் நன்றாகத் தெரியும். அந்தப் பலாச்சுளையை உரிக்க வேண்டு மென்றால் அதிலே மேலேயுள்ள முட்களை அகற்ற வேண்டும், அடியிலே உள்ள நாரையும் பாலையும் அகற்றி அந்தப் பலாச் சுளையைக் கொடுக்க வேண்டும். அந்த முறையிலே மாண்புமிகு